செய்தி வெளியீடு எண்.171 நாள். 30.03.2018

**ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை எடுத்துச்செல்பவர்கள் மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொடரும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை.**

திருவள்ளூர் மாவட்டத்தில் ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வாகனங்களில் எடுத்துச் செல்வது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவின்பேரில், கடந்த இரண்டு மாதங்களில், மாவட்டத்தில் கொசஸ்தலை ஆறு மற்றும் ஆரணி ஆறு செல்லும் கிராம பகுதிகள் மற்றும் பிற பகுதிகளில் வருவாய் துறையினர், கனிமவளத்துறையினர் மற்றும் காவல் துறையினர் ஆகியோரர் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில். உரிய அனுமதியின்றி கனிமங்கள் ஏற்றிச்சென்ற 313 வாகனங்கள் மற்றும் 69 மாட்டு வண்டிகள் கைப்பற்றப்பட்டும். 142 நபர்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டும். கனிம வள விதிகளின்படி அபராத தொகை சுமார் ரூ.63,17,000 அரசுக்கணக்கில் வசூலிக்கப்பட்டுள்ளது மேலும். மார்ச் 2018 மாதத்தில் இக்குற்றச்செயலில் ஈடுபட்ட இரண்டு நபர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, ஆற்றுப்படுகைகள். அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்லும் வாகனங்களை கண்காணிக்க தீவிர ரோந்து பணிகள் மேற்கொள்ளுமாறு வருவாய்துறை, கனிமவளத்துறை மற்றும் காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இக்குற்றச்செயலில் ஈடுபடுவோர் மீது குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொடரும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கிறார்.

வெளியீடு - செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்